# சுகந்தி அன்னத்தாய் "அடுக்குப்பானை" கவிதை ஓர் ஒப்பீட்டியல் முறைத் திறனாய்வு

14

**முனைவர் த. முத்துலட்சுமி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**
**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி**
**குரோம்பேட்டை, சென்னை-44**

**ஆய்வுச்சுருக்கம்:**

சுகந்தி அன்னத்தாய் அடுக்குப்பானை கவிதையில் காணப்படுகின்ற சுயசரிதைத் தன்மையை,சங்க கால, இடைக்கால, தற்கால இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ள சுயசரிதை அமைப்பினையும் ஒப்பிட்டு ஆய்வுசெய்வது இக்கட்டுரையின் பணியாகும்.

**ஆய்வு நோக்கம்:**

காலம்தோறும் சுயசரிதை அமைப்பு இருந்து வருகின்றது. அவற்றில் ஏற்பட்டுள்ள ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் ஒப்பிட்டு ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**கலைச்சொற்கள்:**

சுயசரிதை- தன் வரலாறு, செம்மாப்பு- பெருமை, சான்றோன் – பெருமைக்குரியவன்,போக்கு சொல்லாமல்- ஏமாற்றாமல்.

**முன்னுரை**

சுகந்தி அன்னத்தாய் அவர்களின் அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பு ஒரு சுயசரிதைக் கவிதைத் தொகுப்பாக அமைந்து அடுக்கடுக்கான எண்ணங்களின் தொடுக்கப்பட்ட மலர்களாக மணம் வீசுகின்றன. சுகந்தி அன்னத்தாய் அவர்கள், ஸ்ரீமதி தேவ் குமார் நானா லால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் சுயநதி பிரிவு, தமிழ் துறையில் உதவி பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் ஒன்றுதான் அடுக்குப்பானை கவிதை தொகுப்பாகும். அந்த அடுக்குப்பானைக் கவிதைத் தொகுப்பை ஒரு ஒப்பீட்டியல் முறை திறனாய்வு அணுகுமுறையால் அணுகுவது இக்கட்டுரையின் பணியாக அமைகிறது.

**ஒப்பீட்டுத் திறனாய்வு**

இலக்கியங்களில் காணப்படும் ஒன்றுபட்ட வேறுபட்ட பண்புகளை ஒப்பிட்டு அமைப்பது ஒப்பீட்டுத் திறனாய்வு அணுகுமுறையாகும்.

**பொதுவாக ஒத்தத் தன்மையுள்ள பண்புள்ள இலக்கியங்களை ஒப்பிடுவது ஒப்பீட்டுத் திறனாய்வு எனப்படும். ஒன்றனை இன்னொன்றோடு ஒப்பிடுவதற்குக் காரணம் ஒன்றனை விட இன்னொன்று சிறப்பானது என்று செம்மாப்புக் கொள்வதற்காக அன்று. மாறாகக் குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளை மேலும் சரியாகவும் நிறைவாகவும் விளக்குதற்காகவுமேயாகும்.** [1]

என்ற தி. சு. நடராசனின் கருத்தைப் பின்பற்றி ஆய்வு கட்டுரை கட்டமைக்கப்படுள்ளது. அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பு ஒரு சுயசரிதைக் கவிதையாக அமைவதால், இதற்கு முன்னர் தோன்றிய சுயசரிதை நூல்களையும், தற்காலத்தில் தோன்றிய சுயசரிதை கவிதைகளையும், ஆசிரியரின் கவிதையில் காணப்படுகின்ற சுயசரிதையும் அதில்

சுட்டப்பட்டுள்ள இலக்கிய தாக்கத்தையும் **ஒப்பீட்டு முறை திறனாய்வு** முறையினால் காணலாம்.

**அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பு**

அடுக்குப்பானைக் கவிதைத் தொகுப்பு ஆசிரியரின் இளமைப் பருவம் முதல், படிப்படியான வளர்ச்சி நிலைகளை வகைபடுத்துவனவாய் அமைந்து எண்ணங்களின் வளர்ச்சிப் படிநிலைகளைக் காட்சிப்படுத்துவனவாய் ஆக்கப்பட்டுள்ளன. அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பானது ஒரு சுயசரிதை நூலாக அமைந்து வாழ்க்கையை முன்னோக்கிச் சென்றுப் பார்க்கத் தூண்டுகின்றது. கடந்த கால வாழ்க்கையில் இருந்து நிகழ்கால வாழ்க்கைக்குக் கைப்பிடித்து அழைத்து வருகின்றது. எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் அமைந்து முக்காலத்தையும் படம்பிடித்து காட்சிப்படுத்துகின்றது.

**சுயசரிதை நூல்கள்**

சுயசரிதை என்பது கவிஞன் அல்லது ஒரு படைப்பாளி தன்னை பற்றி தனக்கும் பிறருக்கும் தன் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காக எழுதுவாதாகும். சங்க இலக்கியங்களிலும் தன் நிலையை நான்கு வரி பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகின்ற சுயசரிதை தன்மை கொண்ட பாடல்கள் பல உள்ளன. “அற்றைத் திங்கள்” என்ற பாடலில் பாரிமகளிர் தன் தந்தை பாரியுடன், பறம்புமலையில் செல்வ செழிப்போடு தான் வாழ்ந்த நிலையினை,

**அற்றை திங்கள் அவ்வெண்ணிலவின்**

**எந்தையும் உடையெம் எம்குன்றும் பிறர் கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்**
**வென்று எறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்**

**யாம் எந்தையும் இலமே** [2]

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளனர். தன்னுடைய நாட்டையும் அரசர்கள் வெற்றி கொண்ட பிறகு, தான் தந்தை இல்லாமல் வருந்துகின்ற வறிய நிலையை இப்பாடல் மூலம் சுட்டியுள்ளனர். இப்பாடல் பாரி மகளிரின் சுயசரிதத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது. அடுத்து பக்தி இலக்கியமான தேவாரத்தில் நாயன்மார்கள், திவ்வியப் பிரபந்தங்களில் ஆழ்வார்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றை அடியொட்டியே பதிகங்களையும் , பாசுரங்களையும் பாடியுள்ளனர்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**

**ஈசன் எந்தை இணையடி நீழலே**[3]

என்ற பாடலில் மகேந்திரவர்மனால்தான் பட்டத் துன்பங்களை நாவுக்கரசர் சுயசரிதையாக வகைப்படுத்துகின்றார். சமண சமயத்திலிருந்து சிவபெருமான் அருளால் மீண்டும் சைவ சமயத்திற்கு வந்த நிலையில், மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனால், பலத் துன்பங்களுக்கு ஆளாகிறார். நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காலவாயில் தூக்கி போடும்போது, சுண்ணாம்புக் காலவாயில் நின்று கொண்டு , குற்றமற்ற வீணை வாசிப்பது போலவும் ,மாலை மதியமாக இருப்பதாகவும், தூய்மையான தென்றல் காற்று வீசுவது போலவும் கூறி தன் துன்பத்தையும் இன்பமாக மாற்றி அமைத்துக் கொண்டு, பல்லவமன்னனைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றார். அடுத்து அவரை கல்லினைக் கட்டி கடலில் தூக்கி எறியும் போதும்,

**கல்லினை கட்டியோர் கடலில் பூட்டினும்**

**நற்றுணையாவது நமச்சிவாயமே**[4]

என்று பாடி தப்பித்து வருவதைப் பதிகங்கள் பதிவு செய்கின்றன. தற்காலத்தில் உரைநடை வளர்ச்சியின் காரணமாக உ. வே. சாமிநாத ஐயரின் என் சரித்திரம் என்ற உரைநடை நூலும், தமிழ் தாத்தா அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகவே அமைந்துள்ளன. இவ்வாறு சங்க காலம், இடைக்காலம், தற்காலத்தில் நீட்சியாகப் பல சுயசரிதை நூல்கள் உரைநடை வடிவிலும், கவிதை அமைப்பிலும் உருவாகி மக்கள் தம் மனதில் பசுமரத்தாணியாகத் தம் தடத்தைப் பதித்து வருகின்றன. இதற்கு அடுத்த நிலையில் இராமலிங்கம் பிள்ளையின் என் கதை, கண்ணதாசனின் வனவாசம் – மனவாசம், மு .கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதி, பம்மல் சம்பந்த முதலியார் என் சுயசரிதை, வைரமுத்துவின் இதுவரை நான் போன்ற பல சுயசரித நூல்கள் உரைநடை அமைப்பிலும் கவிதை நடை அமைப்பிலும் காணப்படுகின்றன.

**அடுக்குப்பானைக்குள் சுயசரிதைப் பாங்கு:**

அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பு முழுவதுமான **சுயசரிதை அமைப்பையும், வடிவத்தையும்** கொண்டு பின்னப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவிதையும் ஒரு சிறிய கதையைச் சுட்டுகின்றன. ஆசிரியரின் தாய், தந்தை, சகோதரன், பாட்டி, மாமன், தோழி, பிள்ளைகள், இயற்கை, உணவு முறை, பொருட்கள், உயிருள்ள பொருட்கள், உயிரற்ற பொருட்கள் என அனைத்தையும் சுட்டி உணர்வுபூர்வமானச் சிந்தனையை, அன்பை, மனிதாபிமானத்தை மனதில் விதைக்கிறார். அடுக்குப்பானை படிப்பவரைக் கைப்பிடித்து, ஆசிரியருடன் பயணிக்கின்ற **பயண இலக்கிய** கவிதைத் தொகுப்பாக மற்றொரு பரிணாமத்தைக் காட்டுகின்றது. முப்பரிமாணக் கண்ணாடியாகத் திகழ்கிறது.

**முதுமையைப் போற்றுவோம்**

முதுமையைப் போற்றுவோம் என்ற தலைப்பில்

**முதுமையால்**

**தட்டு தடுமாறிடும்**

**வேளையில்**
**தாங்கிடப் பழகி**

**பெரிதுவக்கும் தாய்க்கு**
**நற்சான்றோனாய்த் தி**

**திகழ்ந்திடுவோம்** [5]

என்ற புதுக்கவிதையானது முதுமையால் தடுமாறிடும் தாயைக் காப்பது மகனின் கடமை என்ற சுட்டுகின்றார். மேலும் நற்சான்றோனாய்க் கண்டிப்பாக அந்த மகன் திகழ தான் வேண்டும் என்பதை உணர்த்துகின்றார். இக்கவிதையை,

**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்** [6]

என்ற திருக்குறளோடு ஒப்பிடலாம். மகன் கண்டிப்பாகச் சான்றோனாய்த் தான் திகழ வேண்டும் என்ற

கருத்தைத் திருக்குறளும் சுட்டுகின்றது. இவ்வாறு நற்சான்றோனாய்த் திகழ வேண்டும் என்ற சிந்தனையைத் திருக்குறளை அடியொற்றி சுகந்தி அன்னத்தாயும் பதிவு செய்கின்றார்.

**கண்ணன் என் சேவகன்:**

**வீட்டிற்கு உதவி செய்யும்**

**அந்நாட்களில்**

**முத்து என்றவுடன்**

**அக்கா என்று**

**எண்ணெயாய்**

**வந்து நிற்பான்[7]**

என்ற வரிகளில் பாரதியாரின் பாடலை நினைவுபடுத்துகின்றார் ஆசிரியர். தாய்க்கு உதவியது, தந்தையை மருத்துவமனையில் கருத்தாகப் பார்த்துக் கொண்டு பல உதவி செய்த சிறு வயது தோழனான முத்துவை,

**அழைக்கும் பொழுதினிற் போக்கு சொல்லாமல்**

**அரை நொடிக்குள் வருவான்;**

**மழைக்கு குடை பசி நேரத் துணவென்றன்**

**வாழ்வினுக்கெங்கள் கண்ணன்[8]**

என்ற பாரதியாரின் கண்ணன் என் சேவகனோடு ஒப்பிடலாம்.

**தலைவி – தாய் அன்பு நிலை:**

**எலுமிச்சை அளவு புளி**

**கரைசலில் கரைத்து**

**மண் சட்டியை அடுப்பேற்றி**

**கடுகு வெந்தய தாளிசலில்**

**ஊற்றி கொதிக்கவிட்டு[9]**

என்று தன் தாய், குழம்பு வைக்கின்ற சமையல் குறிப்பையும் பதிவு செய்கின்றார். சங்க இலக்கியப் பாடலான,

**மூளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கங் கழாஅ துஇக்**

**குவளை யுண்கண் குய்புகை கழுமத்**

**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்[10]**

என்ற பாடலில் தலைவி தலைவனுக்காக சிறு சிறு துன்பங்களையும் பொருட்படுத்தாது, இன்பத்தோடு சமையல் செய்கின்றாள். அதனை போல இவரது தாயும் தாயன்போடு சமையல் செய்வதை ஆசிரியர் கவிதையாக வடித்துள்ளார். ஒரு தலைவி தானே பிற்காலத்தில் தாயாக மறுபிறவி எடுக்கின்றாள். இக்கவிதையைஅன்பு நிலை என்ற நோக்கில் சங்க இலக்கியப் பாடலோடு ஒப்பிட முடிகின்றது.

**முடிவுரை:**

அடுக்குப்பானை கவிதைத் தொகுப்பானது, மனித மனத்தின் ஆழ்மன சிந்தனைகளைத் தூண்டுவதாய்

அமைந்து சுயசரிதைப் பண்போடு, மனதினைப் பண்படுத்துகின்ற செயலைச் செவ்வனே செய்கின்ற கவிதைக் களமாய் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

முதன்மை ஆதாரம்:

1. சுகந்தி அன்னத்தாய் அடுக்குப்பானை கவிதை தொகுப்பு, காவ்யா பதிப்பகம், சென்னை.

அடிக்குறிப்புகள்:

1. தி. சு. நடராசன், திறனாய்வுக்கலை, ப.25
2. புறநானூறு-112
3. திருநாவுக்கரசர் தேவாரம்
4. திருநாவுக்கரசர் தேவாரம்
5. சுகந்தி அன்னத்தாய், அடுக்குப்பானை கவிதை தொகுப்பு,ப.8
6. திருக்குறள்-69
7. சுகந்தி அன்னத்தாய், அடுக்குப்பானை கவிதை தொகுப்பு,ப.99
8. பாரதியார், கண்ணன் பாட்டு-2
9. சுகந்தி அன்னத்தாய், அடுக்குப்பானை கவிதை தொகுப்பு,ப.87
10. குறுந்தொகை-167